1970 டிசம்பர் 2]

## தஞ்சாவூர் மாவட்டத்தில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட எழுத்தர்கள்

* 90 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் எழுத்தர்களாக பணியாற்றியவர்களில் எத்தனை பேர்கள் தற்போது பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்காணும் வகுப்பில் ( Categories )உள்ளவர்கள் நிர்வாக அதிகாரி கிரேடு 1 ஆக, 1966, 1967-ஆம் வருடங்களில் நியமிக்கப் பட்டுள்ளார்கள்—

| பிரிவுகளின் பெயர். | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| நகர பஞ்சாயத்து எழுத்தர்கள் ... ... | 5 |
| நகர பஞ்சாயத்து தலைமை எழுத்தர் ... | 1 |
| பஞ்சாயத்து ஒன்றிய எழுத்தர்கள் ... | 3 |
| பஞ்சாயத்து ஒன்றிய தலைமை எழுத்தர் ... | 1 |
| நகராட்சி எழுத்தர்கள் ... ... ... | 2 |
| நிர்வாக அதிகாரிகள் கிரேடு 2 ... ... | 3 |
| மொத்தம் ... | 15 |

திரு. ஆ. கு. சுப்பையா : இவ்வாறு எழுத்தர்களாக இருப்பவர்கள் எந்தத் தகுதி அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? கிராம சேவக்குகளையும் இந்த நியமனங்களில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைமை எழுத்தர்கள் அவர்களுடைய தகுதியையும், அனுபவத்தையும் வைத்து நியமிக்கப்படுகிறார்கள். அங்கத்தினர் சொன்ன யோசனையும் பரிசீலிக்கப்படும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I know from the Hon. Minister whether an executive officer should not be retained in a particular panchayat for more than three years?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனியாக அப்படி ஒன்றும் விதி இல்லை. அவசியம் ஏற்பட்டால் இடையில் மாறுதல் செய்யலாம்.